**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் -27/2023**

**வாதி தரப்பு சாட்சி-1 ராஜேந்திரன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் முதல்விசாரணை தொடர்ச்சி:**

1. 19.12.1991 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்(வா.சா.ஆ.1) பதிவு நகல் - வா.சா.ஆ. 5

2. 06.08.2025 ம் தேதியிட்ட சர்வே எண் 38 ற்கான புல வரைபடம் - கணினி நகல் - வா.சா.ஆ.6

**குறுக்கு விசாரணை:**

1) எனக்கு 46 வயதாகிறது. நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். பொதுவாக பத்திரம் எழுதும் போது என்னென்ன ஆவணங்கள் பார்க்க வேண்டும் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஆதியில் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ராஜலிங்கம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. மாரியாயி மற்றும் பூசாரி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தும், பிரதிவாதியின் சொத்தும் ஆதியில் பூசாரி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை யார் கிரையம் வாங்கியது என்றால் எனது தகப்பனார் 1991 ல் கிரையம் வாங்கினார். எனது தகப்பனார் யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் ராஜலிங்கம் மனைவி மாரியாயி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்றால் 19.12.1991 ல் கிரையம் பெற்றார். மேற்படி கிரையம் பெற்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். கிரையம் பெறும்போது சொத்து குறித்த வில்லங்க சான்று மற்றும் புல வரைபடம் ஆகியவற்றை பரிசீலனை செய்தோமா என்றால் செய்தோம்.

2) புல வரைபடத்தில் பாதை ஏதேனும் காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பட்டாவை பார்த்து நிலத்தை அளவீடு செய்த பின்னிட்டுதான் கிரையம் பெற்றோமா என்றால் ஆமாம். நாங்கள் அளவீடு செய்த போது மூல ஆவணங்களில் உள்ளவாறு அளவு சரியாக இருந்ததா என்றால் சரியாக இருந்தது. 38 செண்ட் நிலத்தை பிரதிவாதியின் மாமா பூசாரி என்பவர் சாகுபடி செய்தாரா என்றால் இல்லை. 1980 ம் வருடமே பூசாரி மேற்படி நிலத்தை சாகுபடி செய்தார் என்றும், அதற்குரிய தொகையை ராஜலிங்கத்திடம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ள பாதையின் சர்வே எண் என்னவென்றால் 38/2A ஆகும். வா.சா.ஆ.6 ல் மேற்படி சர்வே எண் 38/2A ல் பாதை கண்டுள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்தில் சர்வே எண் போட்டு பாதை எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு எனது தகப்பனாரின் கிரைய ஆவணத்தில் தனியாக சர்வே எண் போட்டு பாதை குறிப்பிடப்பட்டிருந்தால் அதற்கு தனியாக பணம் கட்டியிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு

என் தகப்பனார் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு பி பட்டியல் சொத்து என்பது நிலையில் இல்லை என்றால் சரியல்ல.

3) நானோ எனது தகப்பனாரோ தாவா பி பட்டியல் சொத்தாக காட்டியுள்ள இடத்தில் பாதையாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அண்ணாதுரையின் சொத்தை ஒட்டி மேற்குபுறமாக உள்ள இடம் யாருடையது என்றால் பெரியசாமியுடையது. பெரியசாமி என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா. பெரியசாமி 12 அடி அகல பாதையை பூசாரியிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளாரா என்றால் ஆமாம். தாவா ஏ, பி பட்டியல் சொத்திற்கு செல்ல எனது சித்தப்பா நிலத்தின் வழியாக சென்று வருகிறோம் என்றால் சரியல்ல, பூசாரி நிலத்தின் வழியாகத்தான் சென்று வருகிறோம். எனது சித்தப்பா பெரியசாமியிடம் ரோட்டில் இருந்து வடக்கில் இருந்து தெற்கு நோக்கி பாதை தாவா சொத்து வரை செல்கிறது என்றால் சரிதான். பிரதிவாதி சர்வே எண் 38/2A ல் 1 ஏக்கர் 63 செண்ட் நிலத்தை 31.01.2001 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய தேதியில் இருந்து பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

4) நில அளவையர் எங்கள் நிலத்தை தனியாகவும், பிரதிவாதியின் நிலத்தை தனியாகவும் அளவை செய்தார் என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்த போது தாவா பி பட்டியல் சொத்து பிரதிவாதியின் நிலத்துடன் சேர்ந்துதான் 1 ஏக்கர் 63 செண்ட் நிலம் இருந்தது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினரின் சொத்தையும் பார்த்திருந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தாவா பி பட்டியல் சொத்தில் எந்த பாதையும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். உண்மையில் பாதை இருந்திருந்தால் நீதிமன்ற ஆணையர் அவ்வாறு எழுதியிருக்க மாட்டார் என்றால் சரியல்ல. தாவா பி பட்டியல் சொத்தானது நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் முட்கள் முளைத்தும், மேடும் பள்ளமாகவும், மரங்கள் நிறைந்ததாகவும் இருந்தது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பி பட்டியல் சொத்தில் பாதை இருந்திருந்தால் வா.சா.ஆ.6 புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**